ஸ்ரீ ஹரி:

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன் வெளிவரும் தெய்வீக மாதப் பத்திரிகை

தனி பிரதி *Rs 15*
ஆண்டு சந்தா *Rs 180*

# மதுரமுரளீ



**Delivered by India Post**
**www.indiapost.gov.in**

**நவம்பர் 2017**
**வேணு 23 | கானம் 4**



உபந்யாசம் மற்றும் மஹாமந்த்ர கூட்டு பிரார்த்தனை, குடியாத்தம், 1 Oct

தீபாவளி, மதுரபுரி ஆஸ்ரம், 18 Oct



# மதுரமுரளி

வேணு 23 | கானம் 4

## பொருளடக்கம்

| | |
|---|---|
| 5 | மதுரமான மஹனீயர்-260 |
| 7 | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் |
| 8 | நாமம் சொல்லுவோம் வாரீர் |
| 14 | நெகிழ வைத்த நிகழ்வுகள் |
| 15 | உண்டி கொடுத்தோர்... |
| 18 | ஒரு உன்னத உரையாடல் |
| 20 | பாலகர்களுக்கு ஒரு கதை |
| 24 | குரு |
| 31 | உள்முக மாற்றம் |
| 32 | பாரம்பரிய பொக்கிஷங்கள் |
| 35 | சைதன்ய மஹாப்ரபு |
| 38 | படித்ததில் பிடித்தது |



முன் மற்றும் பின் அட்டை:
மதுரபுரி ஆஸ்ரமத்தில்
ஸ்ரீ ஸ்வாமிஜி



# மதுரகீதம்

**ராகம்:** லதாங்கி
**தாளம்:** ஜம்பை

**பல்லவி**

ஒரு நொடி நின் திருவடி நிழலில் நான் நின்றிட
கோடி பிறவிகளின் புண்யம் வேண்டும் - வேங்கடவா

**அனுபல்லவி**

அடி மூன்று அன்று வலிய வந்து கேட்டு - ஒரு
நொடியில் ஓங்கி உலகளந்த உத்தமனே (ஒரு)

**சரணம்**

அடிக்கீழ் புகலின்றி அமர்ந்து புகுந்து
படியாகி பவழ வாய் கண்டார் ஆழ்வாரே
மடி மீது ஏறி அமர்ந்தான் ப்ரஹ்லாதனே
வடிவழக நம்பியே உன்னையே சரண் புகுந்தேன் (ஒரு)





# மதுரமான மறைவீயர்

- Dr ஆ பாக்யநாதன்

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின்
அந்தரங்க செயலாளர்

ஸ்ரீ ஸ்வாமிஜி எப்பொழுதும் திருவேங்கடமுடையானையும், ஏழு மலைகளையும், ஆனந்த விமானத்தையும், வராஹப் பெருமாளையும், ஸ்வாமி புஷ்கரிணி தீர்த்தத்தையும் த்யானம் செய்து கொண்டேயிருப்பார். தான் திருமலைமீது ஏறிச் செல்வது போலும், அந்த மலையைப் பார்த்து பார்த்துப் பரவசமடைந்து நாமஸங்கீர்த்தனம் செய்துகொண்டே அந்த மலையை ஸேவிப்பது போலவும், அளவற்ற ஆனந்தத்துடன் ஸ்வாமி புஷ்கரிணியில் தீர்த்தமாடி பூவராஹப் பெருமாளை ஸேவித்து உள்ளே சென்று ஜெய விஜயர்களைத் தாண்டி குலசேகரப் படியில் நின்று கொண்டு, அன்று ஆழ்வார் படியாய்க் கிடந்து உன் பவளவாய்க் காண்பேனோ என்று அந்தப் பெருமாளை அனுபவித்தாரே அதுபோல், அந்தப் படியாய் நாம் இருக்கக்கூடாதா என்று நினைத்துக்கொண்டே த்யானத்தில் அந்தப் பெருமாளை ஸேவிப்பார். அப்படி ஸேவிக்கும்போதெல்லாம் அவருக்கு அடிக்கடி அந்தத் திருமலையில் நிறைய மழை பொழிந்து, ஸ்வாமி புஷ்கரிணியில் தீர்த்தம் முழுவதுமாக வழிந்து, அந்த திருமலையில் இருக்கக்கூடிய பல தளிர்கள், புஷ்பங்கள் எல்லாம் சேர்ந்து ஸ்வாமி புஷ்கரிணியில் மிதப்பதுபோலவும், தான் அதிலே தீர்த்தமாடுவது போலவும், அப்படி ஸ்நானம் செய்யும்போதே ஆனந்த விமானத்தையும், பெருமாளுடைய கர்பக்ருஹத்தின் ஸ்வர்ண கோபுரத்தையும் பார்த்து ஸேவிப்பதுபோலவும் அடிக்கடி தனக்குத்தானே சிந்தித்துக்கொண்டு ஆனந்தமடைவார். அப்படி ஸ்வாமி புஷ்கரிணியில் ஸ்நானம் செய்யும்போது தன்னிடமிருக்கக் கூடிய சிறிய ஸுந்தர ஸ்ரீநிவாஸ மூர்த்தியையும் தன்னுடைய தலையில் வைத்துக்கொண்டு தீர்த்தமாடுவதுபோல் பலமுறை நினைத்துக்கொள்வார். ஸ்ரீஸுந்தர ஸ்ரீநிவாஸனைப் பார்த்து, "நான்தான் திருமலைக்குச் செல்லவில்லை, உம்மை யாருடனாவது அனுப்பிவைக்கிறேன் அவர்களுடன் சென்று ஸ்வாமி புஷ்கரிணியில் தீர்த்தமாடி வாரும்" என்று சொல்லுவார்.

ஆனால், ஸ்ரீஸுந்தர ஸ்ரீநிவாஸன் அதை விரும்பமாட்டார். ஸ்வாமிஜிக்கும் யாருடனாவது அவரை அனுப்பிவைப்பதில் சற்று பயம். ஏனென்றால், பொறுப்பாக ஸ்ரீநிவாஸனை அழைத்துச் சென்று திரும்பிப் பத்திரமாகத் தன்னிடம் கொண்டு ஒப்படைப்பார்களா என்ற கவலை.

சமீபத்தில் ஆசிரமத்தில் ஒருநாள், ஸ்ரீஸ்வாமிஜி பாகவத பவனத்தில் அமர்ந்து நாமம் சொல்லிக் கொண்டேயிருந்தார். நல்ல மழை பொழிந்து கொண்டிருந்தது. ஸ்வாமிஜிக்கு உடனே திருவேங்கடமுடையானுடைய சிந்தனையும், ஸ்வாமி புஷ்கரிணியினுடைய சிந்தனையும் வந்துவிட்டது. நேராக நாராயண ஸரஸ் தீர்த்தம் சென்றார் (நம்முடைய ஆசிரமத்தில் கல்யாண ஸ்ரீநிவாஸருக்குப் பக்கத்தில் நாராயண ஸரஸ் தீர்த்தம் உள்ளது), அவர் நினைத்ததுபோலவே நல்ல மழை! குளமானது பொங்கி வழிகின்றது, அதில் பல புஷ்பங்கள், தளிர்கள் எல்லாம் சேர்ந்து மிதக்கும் அழகே அழகு! அது மதுரபுரியிலுள்ள நாராயண ஸரஸ் என்பதே அவருக்கு மறந்துவிட்டது. அவரது கண்முன் ஸ்வாமி புஷ்கரிணிதான் விரிந்திருந்தது. நாராயண ஸரஸை, ஸ்வாமி புஷ்கரிணியாக பாவித்துக் கொண்டார். உடனே, அதில் இறங்கித் தீர்த்தமாடி ஆனந்தமடைந்தார்.

மாலையில் ஸ்ரீ ப்ரேமிகவரதனுடைய ஸந்நிதானத்திற்கு வந்து பார்த்தால், ஸ்ரீ ஸுந்தர ஸ்ரீநிவாஸனுடைய முகம் வாடியிருந்தது. பெருமாள் ஸ்வாமிஜியிடம் சற்றே கோபம் கொண்டிருந்தார். கோபத்திற்கான காரணமும் ஸ்வாமிஜிக்கு உடனே விளங்கிவிட்டது. "அச்சச்சோ, எப்பொழுதுமே இவரையும் தலைமேல் வைத்துக்கொண்டு நாம் ஸ்நானம் பண்ணுவதாகத்தானே நினைப்போம். இன்று, இவரை விட்டு விட்டு ஸ்நானம் செய்துவிட்டோம், அதனால்தான் இந்தக் கோபம்" என்று புரிந்துகொண்டார். ஸ்ரீஸுந்தர ஸ்ரீநிவாஸனைப் பலவாறாக ஸமாதானப்படுத்தினார். இரவு முழுவதும் ஸ்வாமிஜிக்கு உறக்கம் வரவில்லை. எப்போது பொழுது விடியும் என்று காத்திருந்து, விடிந்தவுடனேயே ஸ்ரீஸுந்தர ஸ்ரீநிவாஸனை அழைத்துக்கொண்டு, ஸ்வாமி புஷ்கரிணியாக பாவனை செய்யும் நாராயண தீர்த்தத்திற்கு சென்றுவிட்டார். ஸ்வாமியைத் தலையில் வைத்துக்கொண்டு புஷ்கரிணியில் தீர்த்தமாடிய பிறகுதான் அவரது முகம் மலர்ந்தது.

பிறகு ஸ்வாமிஜி அனுஷ்டானம் செய்வதற்காகக் குளத்தின் ஒரு மூலையில் அமர்ந்திருந்தார். எப்போதோ செய்யப்பட்ட ஒரு கல் மண்டபம் குளத்தின் மூலையில் இருந்தது. அதைக் கண்டதும் ஸ்ரீஸ்வாமிஜி கண்ணசைத்தார். அவ்வளவுதான், அதன் பிறகு எல்லா ஏற்பாடுகளும், அவரது மனோவேகத்தில் நிகழ்ந்தன. சில பக்தர்கள் அதை அழகாக வெளியில் கொண்டு வந்து வைத்தனர். நீரினால் சுத்தம் செய்து, அதற்கு மாவிலைத் தோரணங்கள் கட்டி, செம்மண் காவிப்பட்டை அடித்து, சற்று நேரத்திற்குள் மிக அழகாக அலங்கரித்துவிட்டனர். அதில் ஸுந்தர ஸ்ரீநிவாஸப் பெருமாள் எழுந்தருளினார். ஸ்வாமிக்கு அன்று தினை தீபமும் போடப்பட்டது. அதோடு மட்டுமில்லாமல் அந்தக் குளத்தை பகவான் அழகாக நாமஸங்கீர்த்தனத்தோடும், சத்ர சாமராதிகளுடனும் ப்ரதக்ஷிணமும் செய்து வந்தார். அன்று ஸ்ரீஸுந்தர ஸ்ரீநிவாஸன் அடைந்த ஆனந்தம் சொல்லுக்கெட்டாது. சிறிதளவும் முன்னேற்பாடுகள் செய்யப்படாதபோதிலும், சுத்த ஸாத்வீகமான ஒரு அனுபவத்தில், இப்படி ஒரு சிறிய அழகான வைபவம் மிக நேர்த்தியாக நடந்தேறியது. அன்று அந்த பெருமாளைக் கொண்டாடிய விதம் ஸ்வாமிஜிக்கு ஒரு எல்லையில்லாத உகப்பைக் கொடுத்தது.

நாமாக நன்றாக யோசித்து ஒரு முடிவெடுத்து, திட்டம் போட்டுப் பல உற்சவங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆனாலும், சில உற்சவங்கள் இப்படி அபூர்வமாக திடீரென்று ஸ்ரீஸ்வாமிஜியின் மனதில் தோன்றுவதும், உடனே அதை மிக நேர்த்தியாக பகவான் நிறைவேற்றிக் கொள்வதும் அழகே அழகு! இவற்றை அனுபவிப்பதை விடப் பெரிய ஆனந்தம் நமக்கு ஏது?

## பக்தர்களின் கேள்விகளுக்கு
## ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

**தியானம் செய்வது பகவானுடைய க்ருபையை நம்புவதாக ஆகுமா? அல்லது தன் முயற்சியை நம்புவதாக ஆகுமா?**

இதற்கான பதில், நாம் தியானம் செய்யும் விதத்தை பொறுத்தது. ஒரு நல்ல படித்த இளைஞர் மட்டும் எனக்கு கிடைத்தால் போதும், என் நிர்வாக திறமையைக் கொண்டு அவரை வழிநடத்தி என் வியாபாரத்தை பெருக்குவேன் என்கின்றார் ஒருவர். மற்றொருவர் அப்படி ஒரு ஆள் கிடைத்தால் போதும், அவரிடமே முழு பொறுப்பையும் விட்டு விடுவேன் என்கின்றார். அதுபோல்தான் இது. ஸ்ரீ க்ருஷ்ணரை தியானம் செய்யும் பொழுது, இந்த ஸ்ரீ க்ருஷ்ண ஸ்வரூபத்தைக் கொண்டு என் மனதை வழிக்கு கொண்டு வருவேன் என்று நினைத்தால் அது தன்முயற்சி. அந்த ஸ்ரீ க்ருஷ்ணரிடம் என் மனதை ஒப்படைத்து விடுவேன். அவர் அதை வழிக்கு கொண்டு வருவார் என்றால் அது க்ருபையை நம்புவதாக ஆகும்.




75 & 77, KG Marina Bay, Santhome High Road, Santhome, Chennai - 600 004
Phone: 044 - 42144662, 43033313, 43033326
contact@buddiesinfotech.com www.buddiesinfotech.com

# நாமம் சொல்லுவோம் வாரீர்...

- Dr ஆ பாக்யநாதன்

நவம்பர் 8 2017 அன்று ஆஸ்திரேலியாவில் உள்ள மெல்போர்னிலும் அமெரிக்காவில் உள்ள அட்லாண்டாவிலும் நாமத்வார்கள் ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளாசியுடன் தொடங்க உள்ளன. அதே தினத்தன்று ஸ்ரீ ஸ்வாமிஜியின் திருக்கரங்களால் பெரியகுளம் நாமத்வார் திறந்துவைக்கப்பட உள்ளது. மெல்போர்ன் நாமத்வாரின் திறப்பு விழாவிற்காக video பதிவு செய்யப்பட்டு ஒளிபரப்பப்பட்ட ஸ்ரீ ஸ்வாமிஜியின் அனுக்ரஹ பாஷணத்தின் சாரம் பின் வருமாறு -

“உலகத்தில் எந்த பகுதியில் வாழக்கூடிய மக்களாக இருந்தாலும், எந்த கலாச்சாரத்தை பின்பற்றக்கூடிய மக்களாக இருந்தாலும், தெய்வீக வழிபாடு என்பது எல்லோருக்கும் பொதுவானதாகவும், எளிமையானதாகவும் அமையவேண்டும். அத்தகைய வழிபாடு நாமாக கற்பனை செய்ததாக இருந்துவிடக் கூடாது. சாஸ்திரத்திற்கு சம்மதமாக இருக்க வேண்டும். சாஸ்திரத்திற்கு எது சம்மதமோ அதுதான் இறைவனுக்கும் சம்மதமானது. அப்படியென்றால் எந்த ஒரு பொது வழிபாட்டை காண்பிப்பது?

கடுமையான விதிகளை விதிக்கக்கூடிய நம்முடைய மதமே நம் புராணங்களில், நாம் வாழும் காலகட்டத்தைப் பற்றி மிக துல்யமாகவும் விரிவாகவும் கூறியுள்ளது. புராணங்களை முழுமையாக உள்ளே சென்று பார்க்காதவர்களுக்கு, அது புரியாது.

நாம் எப்படி இருந்தோம் என்பதை நம் குடும்பத்தில் பெரியவர்கள் சொல்லி கேள்விப்பட்டிருப்போம். ஒரு கிராமத்தில் இருந்தார்கள். ஒரு பழங்காலத்து வீடு. அந்த கிராமத்தில் ஒரு நதி ஓடும். நதிகளில் எப்பொழுதும் குறையாத நீரோட்டம், விவசாயம், காய்கறிகள் என்று ஒரு போட்டி இல்லாத எளிமையான வாழ்க்கை. ஒரே கிராமத்தில் நூறு தலைமுறைகளாக ஊரை விட்டு போகாமலேயே வாழக்கூடிய ஒரு வாழ்க்கை முறை இருந்தது. பிரயாணத்திற்காகக் கூட வெளி ஊர்களுக்கு போகமாட்டார்கள். திருமணம் செய்துகொள்ளும்பொழுது கூட சுற்றுவட்டாரத்தில் இருக்கும் கிராமத்திற்குள்ளேயே தான் செய்துகொள்வார்கள்.

நாம் இன்றைய காலகட்டத்தில் எப்படி இருக்கின்றோம் என்பது நமக்கே தெரியும். இன்று இத்தகைய ஒரு வாழ்க்கை முறை வருவதற்கான காரணம், ஒன்று போட்டி. இரண்டாவது, ஆசை. அந்த காலத்தில் பெரிய தேவைகள் இல்லை, பெரிய ஆசைகள் இல்லை. சமுதாயம் திறந்துவிடப் பட்டிருந்ததாகவும் இல்லை. Restrictions இருந்தன. நமக்கு இன்றைய காலகட்டத்தில் போட்டி, ஆசை, என்பவை மிக அதிகமாகிவிட்டன. சமுதாயத்துடைய எல்லா வாசல்களும் திறக்கப் பட்டுள்ளன. அதனால் நமக்கு எது வேண்டும் எது வேண்டாம் என்று தீர்மானிப்பதிலேயே ஒரு திண்டாட்டம். இது வேண்டாம் என்று ஒரு பக்கம் எண்ணம். நாம் வேண்டாம் என்று நினைப்பது தப்போ என்று இன்னொரு பக்கம் திண்டாட்டம். இப்படி நம் வாழ்க்கைமுறைகள் இருக்கும்பொழுது, இறைவன் வழிபாட்டிற்கு ஒரு மனிதன் எவ்வளவு மணித்துளிகள் செலவழிக்கமுடியும்? எந்த வழியை பின்பற்ற முடியும்?

உணர்வுகளே இல்லாமல் ஒரு மனிதன் இருந்துவிட்டானென்றால் அவன் ஒரு robotவிற்கு (இயந்திரத்திற்கு) சமமாக ஆகிவிடுகின்றான். ஒரு மனிதன் முழு மனிதனாக இருக்கவேண்டும். ஒரு முழு மனிதன் அவனுடைய பெற்றோர்கள், உடன் பிறந்தவர்கள், சுற்றங்கள் ஆகியோருக்கு தன் வாழ்க்கையிலிருந்து ஒரு பங்கை கொடுக்கவேண்டும். பங்கு என்றால் சொத்தோ பணமோ அல்ல. அவனுடைய அன்பும் ஆதரவும் தான். குடும்பத்தார்களுக்கு செய்யவேண்டிய கடமைகள், சமுதாயத்தில் அவனுடைய கடமைகள், அலுவலகத்தில் பொறுப்புகள் இப்படி பலதரப்பட்ட விஷயங்களை அவன் திருப்தி படுத்த வேண்டியவனாக இருக்கின்றான். இதற்கு நடுவில் அவனுக்கு சற்று ஓய்வு, பொழுதுபோக்கு, கலை ஆர்வம் ஆகியவையும் அவசியமாகின்றன - கலை ஆர்வம் இல்லாவிட்டால் மனிதனுக்கு வாழ்க்கை வெறுத்து போய்விடும். கலை ஆர்வம் இருந்தால்தான் மனிதன் ஒரு machine ஆகிவிடாமல் சற்றாவது சந்தோஷமாக இருப்பான்.

நாம் மாலை வேளையில் கடற்கரை ஓரம் செல்லும்பொழுதோ, மலை மேல் ஏறி போகும்பொழுதோ, அல்லது ஒரு காட்டிற்குள் போகும்பொழுதோ, ‘இந்த இடம் எவ்வளவு அமைதியாக இருக்கின்றது, மனதிற்கு எவ்வளவு நிம்மதியாக இருக்கின்றது’ என்று தோன்றும். வெளியே சப்தமில்லாத ஒரு இடத்தை பார்த்தாலே நம்முடைய மனதில் அமைதி வரும்பொழுது, நம் மனதே அமைதியாக இருந்தால் எப்படி இருக்கும்! அத்தகைய அமைதியை மனதிற்குள் எப்படி கொண்டு வருவது? அந்த அமைதி மனதில் வருவதற்கு, இறைவன் மனதிற்குள் வசிக்க வேண்டும். நாம் பகவான் க்ருஷ்ணனை எப்பொழுதும் மனதில் நிறுத்த வேண்டும்.

‘ஏன் பகவான் க்ருஷ்ணனை பூஜை செய்ய வேண்டும்? ஏன் க்ருஷ்ணனை த்யானம் செய்ய வேண்டும்? ஏன் க்ருஷ்ண கீர்த்தனம் செய்ய வேண்டும்? ஏன் க்ருஷ்ணனின் கதைகளை கேட்க வேண்டும்? ஏன் க்ருஷ்ணனுடைய நாமத்தை சொல்லவேண்டும்?’ என்று நாம் கேட்கலாம். உலகத்தில் பல சுக துக்கங்கள், விருப்புகள், போட்டிகள், பொறாமைகள், சண்டைகள், சம்பவங்கள் நாம் இருக்கக்கூடிய காலகட்டத்தில் நம்மை சுற்றி நடந்துகொண்டே இருக்கின்றன. ஒவ்வொன்றாலும் நாம் பாதிக்கப் பட்டுக்கொண்டே இருப்போம். சந்தோஷம் என்றால் மகிழ்ச்சி, துக்கம் என்றால் வருத்தம், மற்றொரு பக்கம் வெறுப்பு - இப்படித்தான் வாழ்ந்துகொண்டு இருக்கின்றோம். சின்ன சின்ன விஷயங்களால் நாம் பாதிக்கப் படுகின்றோம் - நம்மை பற்றி யாராவது தவறாக பேசியது நம் காதில் விழுந்தால், உடனடியாக நம் உற்சாகம் போய்விடுகின்றது. நாம் நினைத்தாலும் நம் மனது அதைவிட்டு வெளியே வர மறுக்கின்றது. Bankல் நம் பணம் சிறிதளவு குறைந்துவிட்டால்கூட வருத்தம் ஏற்படுகின்றது. நாம் ஒரு விஷயத்தை சொல்ல, இன்னொருவர் வேறு விஷயத்தை சொல்ல, அவர் சொன்ன விஷயம் நடந்து, நாம் சொல்வதை மற்றவர் கேட்க மறுத்தால், நம் ego அடி வாங்கி தலை தூக்குகின்றது.

ஆனால் ஒருவர் மட்டும் எது நடந்தாலும் கவலை படாமல் ஆடாமல் அசையாமல் இருக்கின்றார். அவர் அப்படி இருப்பது ஒரு பட்டுப்போன மரம்போல் அல்ல. அது அவருடைய ஆனந்த நிலை. அவரை சுற்றி எது நடந்தாலும், அவருக்கே ஏதாவது நடந்தாலும் அவர் அதனால் பாதிக்க படாமல் இருக்கின்றார். அவரின் உள்ளேயே உள்ள ஆனந்தமானது எது நடந்தாலும் அதை அவருக்கு தெரியப்படுத்தாமல் செய்துவிடுகிறது. எது நடந்தாலும் அது நம்மை சேர்ந்தது இல்லை என்று, தள்ளிவிட்டு ஆனந்தமாக இருக்கிறார். இப்படி ஒருவரை பற்றி கேட்கும்பொழுதே நாமும் அப்படி ஆகிவிட்டோமானால் எவ்வளவு அருமையாக இருக்கும் என்று தோன்றுகிறது. அப்படி ஒருவர் இருந்து, நாம் அவரையே தியானம் செய்து, அவருடைய நாமத்தையே சொல்லிக்கொண்டு அவரையே பாடிக்கொண்டு இருப்போமானால், அவரை போலவே நாமும் மாறிவிடுவோம். நம் பகவான் க்ருஷ்ணர் அப்படிப்பட்டவர். பிருந்தாவனத்தில் இருக்கும் வரையில் எல்லோருக்கும் பக்தியை வாரி வழங்கினார். சின்ன மாடு மேய்க்கும் குழந்தைகளிலிருந்து கோபிகைகள் வரை எல்லோருக்கும் ப்ரேமை என்கிற சுயநலம் இல்லாத, கபடமற்ற அன்பை காட்டினார். அடுத்ததாக மதுராவிற்கு வந்து துவாரகையில் இருக்கும்பொழுது நிர்வாகம் செய்து, பாரத யுத்தத்தை நடத்தி கர்ம யோகம் செய்தார். தன்னை சேர்ந்த யாதவ குலமே, அழியும்பொழுது, அதை பற்றி கவலை படாமல் சாட்சியாக ஒரு ஞானிபோல் இருந்தார்.

அப்பேர்பட்ட பகவானுடைய நாமாவை நாம் சொல்வது என்பது மஹான்கள் இன்றைய காலகட்டத்திற்கு எளிமையான வழிமுறை என்று தீர்மானம் செய்து, விதித்திருக்கிறார்கள். தியானம், கர்மா, யோகம், பூஜை என்று எந்த மார்கத்தை எடுத்துக்கொண்டாலும், இப்படி செய்தல் தவறு என்று சுட்டி காண்பிக்க முடியும். ஆனால் நாமாவில் மட்டும் தவறே கண்டுபிடிக்க முடியாது. ஏன் என்றால் தவறாக செய்தாலும் ஏற்றுக்கொள்வேன் என்று பகவானே சொல்கின்றான். பூஜைகளை விதிமுறைகளுக்கு ஏற்ப செய்யாவிட்டால் விபரீத பலன்கள் ஏற்படும். யோகம் தவறாக செய்தால் புத்தி பேதலிக்கும். த்யானம் சீராக செய்யாவிட்டால் தூங்கிவிடுவோம். தமோ குணம் வளர்ந்துவிடும். கர்ம மார்கம் என்பது நமக்கு புரியவே இல்லை. நம்மிடம் குறை இருந்தால்கூட பலன் கொடுக்கும் மார்க்கம் நாமா மட்டுமே. ‘நீ இவ்வளவு நாமா சொல்கிறாயே, நீ ரொம்ப நல்லவனோ?’ என்று யாரவது கேட்பார்களானால், ‘நாங்கள் நல்லவர்கள் இல்லைதான், அதனால்தான் நாங்கள் நாமா சொல்கின்றோம், because we are fit for this. நாங்கள் நாமா சொல்லத்தான் தகுதிவாய்ந்தவர்கள். எங்களை போன்றவர்களும் நாமா சொல்லலாம். அஜாமிளனும் நாமா சொன்னானே’ என்று பதில் அளிக்க வேண்டும். நம்மை எப்பொழுதுமே humbleஆக இருக்க வைத்து, simpleஆன வழியில், அதே சமயம் சாஸ்திர சம்மதமான வழியில் கொண்டுசெல்வது நாமாவின் மஹிமை.

நாமாவை பார்க்கும்பொழுது ‘நமக்கு இருக்கும் கஷ்டமோ பெரியது. நம்முடைய ப்ரார்தனைகளோ மிகவும் பெரியதாக இருக்கின்றன. இவர்கள் நாமாவை சொல்ல சொல்கின்றார்கள். நாம் இருக்கக்கூடிய பெரிய கஷ்டங்களிலிருந்து இந்த நாமா நம்மை காப்பாற்றுமா?’ என்று நீங்கள் யோசிக்கலாம். அப்படித்தானே தோன்றவேண்டும் - அந்த அளவிற்கு நாமா simple. ஆனால் அதிசயம் என்னவென்றால் நாமா அந்த பெரிய பலனை தரும். அதுதான் அதனுடைய greatness. ஒரு சின்ன அணுதானே உலகத்தையே அழித்துவிடுகிறது. நம்முடைய பாவங்களை எல்லாம் பொடி பொடியாக்கி நமக்கு சாந்தி அளித்து, ஞானம் வருவதற்கு நாமாவே போதுமானது. நாம் எந்த இடத்துக்கு போனாலும், எந்த சூழ்நிலையில் நாம் வாழ்ந்தாலும் எத்தகைய கலாச்சாரத்தில் நாம் இருந்தாலும், எந்த வாழ்க்கைமுறையை நாம் பின்பற்றினாலும் ஒரே ஒரு விஷயத்தை மறக்காமல் இருந்தால் போதுமானது -அது என்னவென்றால் - மஹாமந்திரம். இந்த மஹாமந்திரம் மிகவும் அழகானது. வருங்கால சந்ததிக்கு இந்த நாமாதான் ஒரே கதியாக இருக்கப்போகிறது. நாம் நாம் வாழ்வது என்பது ஒரு இடைப்பட்ட காலகட்டம். நம் முன்னோர்கள் ஒரு விதமாக வாழ்ந்துவிட்டார்கள். நமக்கு பின் வருபவர்களின் வழக்கை முற்றிலும் வேறுபட்டதாக இருக்கப்போகின்றது.

அவர்கள் வேறொரு உலகத்தைத்தான் பார்க்கப் போகிறார்கள். அந்த உலகத்திலேயே பிறந்து அங்கேயே வளரப்போகிறார்கள். அவர்களுக்கு இறை சிந்தனையை எப்படி ஏற்படுத்துவது? இன்று நாமாவின் அருமை நமக்கு தெரிகிறதோ இல்லையோ, நாளை அவர்களுக்கு இது ஒன்றுதான் கதி என்று நன்றாகப் புரியும்.

என்னுடைய நீண்ட நாள் கனவு, நாமாவிற்கு மட்டும் ஒரு prayer centre அமையவேண்டும். இதற்கு எந்த ஒரு rituals, ritesம் இருக்கக்கூடாது. Restrictions இருக்கக்கூடாது. Code of dress கிடையாது. எதையும் விடவேண்டும் என்ற நிர்பந்தம் கிடையாது. புதிதாக எதையும் நாம் பின்பற்றவேண்டியதும் கிடையாது. வேற எதுவுமே இல்லாமல் சுலபமான நாமா. இந்த prayer centreக்கு எல்லோரும் வரலாம். Prayer should not be complicated. Just think of your prayer and chant the Name. The Name is powerful. The Name is nothing but God. இந்த நாமாவை சொல்லும்பொழுதே க்ருஷ்ணர் நம் அருகில் இருப்பார். எதை பார்த்தாலும், யாரை பார்த்தாலும் அந்த பகவானாகவே பார்க்க ஆரம்பிக்க வேண்டும். வீட்டில் ஒரு பூனைக்குட்டி ஓடினால்கூட அதில் க்ருஷ்ணரை பார். ஒரு எறும்பு ஓடினால்கூட அதில் க்ருஷ்ணரை பார். ஒருவர் உன்னை திட்டும்பொழுது, சிரித்துக்கொண்டே க்ருஷ்ணர் தான் அவர் மூலமாக நம்மை திட்டுகிறார் என்று நினை. ஒருவர் உன்னை வாழ்த்தும்பொழுது க்ருஷ்ணர் தான் அவர் மூலமாக நம்மை வாழ்த்துகிறார் என்று நினை. ஆக, உலகத்தில் நடக்கக்கூடிய ஒரு தனிப்பட்ட மனிதனின் செயல்களோ அல்லது சமுதாயத்தின் செயலகளோ, எல்லாவற்றிற்கும் காரணம் இறைவனே என்று கருத வேண்டும். இறைவனைத்தவிர வேறு யாரும் இல்லை. எல்லோரும் இறைவனே, இயக்கமும் இறைவனே என்ற நிலையை நாம் அடையும்பொழுது சுலபமாக அந்த அத்வைத நிலையை அடைந்திடுவோம். நாமா ஒன்றே அத்தகைய ஜீவன் முக்தி நிலையில் கொண்டுவிட்டுவிடும்.

என் ஆசைக்கு ஏற்ப, நாமத்வார்கள் என்ற பிரார்த்தனை மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. நம் உடம்பில், உயிர் ஒரு த்வாரம் மூலமாகத்தான் வருகின்றது. உயிர் கிளம்பிப்போகும்பொழுதும் ஒரு த்வாரம் வழியாகத்தான் போகின்றது. அதைபோல், நாம் பகவானை அடைவதற்கு ஒரு த்வாரம் தான் ‘நாமத்வார்’. இந்த வழியில்தான் நாம் பகவானை அடைய வேண்டும். வேறு எந்த வழியிலும் இவ்வளவு சுலபமாக எல்லோராலும் அடையமுடியாது. வேறு எந்த வழியில் முயற்சி செய்தாலும் சுலபத்தில் பலன் கிடைக்காது. பலன் கிடைக்காததற்கு காரணம் வழியின் குற்றம் அன்று. நம்மில் பெரும்பாலானோர் அந்த வழிகளை பின்பற்றுவதற்கான தகுதியை என்றைக்கோ இழந்துவிட்டோம். நாம் அதை உணரவும் ஏற்கவும் மறுக்கின்றோம்.


தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களில் நாமத்வார்கள் உள்ளன - தூத்துக்குடி, சிவகாசி, விருதுநகர், அம்பாசமுத்திரம், கடலூர், பம்மல், அண்ணா நகர், திருச்சி, வத்தலகுண்டு, சேலம், ஸ்ரீபெரும்புதூர், சிதம்பரம், காங்கேயம் ஆகிய இடங்களில் உள்ளன. கர்நாடகாவில் ஒரு நாமத்வார் உள்ளது. பெரியகுளம், மதுரை, கோவில்பட்டி, அருப்புக்கோட்டை, உடுமலைப்பேட்டை ஆகிய இடங்களில் பிரம்மாண்டமான நாமத்வார்கள் வர உள்ளன. வெளிநாடுகளில் சிங்கப்பூர், மலேஷியா, ஆஸ்திரேலியா (சிட்னி), அமெரிக்கா (ஹூஸ்டன்) ஆகிய இடங்களில் நாமத்வார்கள் உள்ளன. சிட்னி நாமத்வார் வருவதற்காக ஒவ்வொரு பக்தரும் தவம் கிடந்து, தன் உடல், பொருள், ஜீவன் எல்லாவற்றையும் அதில் வைத்து அதை உருவாக்கி இருக்கிறார்கள். நாம் casualஆக எந்த ஒரு விஷயத்தை செய்தாலும் அது casualஆக போய்விடும். நாம் த்யாகத்தோடு தபஸ் போல் செய்தால், அது நிலையாக சூரிய சந்திரர்கள் இருக்கும் வரை நீடிக்கும். அப்பேர்பட்ட தவத்தினால் உருவானதுதான் சிட்னி நாமத்வார். இவ்வருடம் நவம்பர் 8 2017 அன்று, மெல்போர்னிலும், அட்லாண்டாவிலும் நாமத்வார்கள் துவங்க உள்ளன. இது தொடர்ந்து மெல்போர்னில் கோப குடீர பாடங்கள் சொல்லித்தரும் ஒரு பள்ளியும் அமைய வேண்டும் என்பது என்னுடைய ஆசை.

நாமா சொல்ல சொல்ல ஒரு இடத்தில் இருக்கும் cosmos மாறிவிடுகின்றது. அது நமக்கு தெரிவதில்லை. ஒரு முறை நான் தஞ்சாவூர் சென்றிருந்தபொழுது ஒருவர் தன் வீட்டிற்கு என்னை அழைத்தார். நான் அங்கே நுழைந்த உடன் எனக்கு அந்த அறையின் மத்தியில் ஒரு வெள்ளை நிற க்ருஷ்ணர் தெரிந்தார். இதை நான் அவர்களிடம் தெரிவித்த பொழுது அவர்கள் ஆச்சர்யம் அடைந்தார்கள். ஏனென்றால் அந்த வீட்டில் 40-50 வருடங்களுக்கு முன்பு ஒரு ஐயங்கார் பாட்டி, ஒரு வெள்ளை நிற க்ருஷ்ணரை வைத்துக்கொண்டு தினமும் பஜனை செய்துவந்திருக்கிறார். அந்த வீட்டை இப்பொழுது வேறொருவர் வாங்கிவிட்டார். இப்பொழுது அங்கே இருப்பவர்களுக்கு அப்படிப்பட்ட ஒரு பக்தி எல்லாம் இல்லை. ஆனாலும், 40 வருடங்களுக்கு பிறகும், அந்த க்ருஷ்ணர் என் கண்களுக்கு தெரிகிறார் என்றால், அதற்கு காரணம் அந்த பாட்டி செய்த பஜனையோட சாநித்யம். அதுபோல் நாமத்வாரில் நாம் நாமா சொல்லிக்கொண்டே இருந்தோமானால் சாநித்யம் வந்துவிடும். அந்த சாநித்தியதை நாம் சுலபமாக உணர்வதற்கு ஒரு வழி உண்டு. ஒரு பெரிய கஷ்டத்தில் இருப்பவர் நாமத்வாருக்கு வரும்பொழுது, உடனடியாக மனது நிம்மதி அடைவதை அவர்கள் உணர்வார்கள். அந்த சாந்திதான் சாநித்யத்தின் அடிப்படை. இறை வழிபாட்டில் ஈடுபடுவதற்கு ஒரு வழியை காண்பிக்கக்கூடிய இந்த நாமத்வார் என்றும் நிரந்தரமாக இருக்க நான் பகவானிடம் ப்ரார்த்திக்கின்றேன்.”

# நெகிழ வைத்த நிகழ்வுகள் 5

ஸ்ரீ ஸ்வாமிஜி

திருநெல்வேலியில் சுப்பிரமணியம் என்ற பக்தர் இருந்தார். அவர் குடும்பத்திற்கு அம்பிகா காபி என்ற காபிப்பொடி கடையும் சொந்தமாக இருந்ததால், அவரை எல்லோரும் அம்பிகா காபி மாமா என்றே அழைப்பார்கள். ஸத்சங்கத்துக்கு வந்ததிலிருந்து எப்பொழுதும் பாகவதம் படித்து வருவார். ஒரு சமயம் குருவாயூரில் ஸப்தாஹம் நடந்தது. அவரும் வந்திருந்தார். நானும் அவரும் குருவாயூரப்பன் கோவிலுக்குச் சென்று, ஸ்ரீவேலி தரிசனம் செய்யக் காத்திருந்தோம். அப்பொழுது நான் அவரிடம், ‘‘சுப்ரமண்யம்! நீங்கள் நல்ல மனுஷ்ய ஜென்மாவை அடைந்தீர்கள். ஆறு பெண்களையும் நல்ல விதமாகக் கல்யாணம் செய்து கொடுத்தீர்கள். ஸத்சங்கத்திற்கு வந்து எப்பொழுதும் பாகவதம் படித்து வருகின்றீர்கள்.. இது உங்களுக்குக் கடைசி பிறவியாக இருக்கட்டும்’’ என்றேன். அவ்வளவுதான் என் கால்களைப் பிடித்துக்கொண்டு அழஆரம்பித்தார். அவரை மெதுவாகத் தூக்கி சமாதானப்படுத்தி, ‘‘ஏன் அழுகின்றீர்கள்? என்ன விஷயம்?’’, என்று கேட்டேன். ‘‘எனக்கு மோக்ஷம் வேண்டாம். எனக்கு அடுத்த பிறவி வேண்டும். இந்தப் பிறவியில் நான் உங்களிடம் வயதான பிறகுதான் வந்தேன். அடுத்தப் பிறவியில் அப்படியில்லாமல் சிறு வயதிலேயே உங்களிடம் வந்து உங்களுடன் இருக்கவேண்டும்’’, என்றார். அவர் என் மேல் வைத்திருந்த ப்ரேமை என்னை நெகிழவைத்துவிட்டது.



# உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்

பாரத மஹாயுத்தம் நிறைவடைந்தது. கௌரவர்கள் மாண்டனர்; தர்மம் வெற்றி கொண்டது!! தர்மபுத்திரருக்கு பட்டாபிஷேகம் செய்யப்பட்டது. தர்மபுத்திரரும் அஸ்வமேத யாகம் செய்ய முடிவு செய்து, சிறப்பாக நடந்துக் கொண்டிருந்தது அஸ்வமேத யாகம். அரசர்கள் வந்து குழுமினார்கள்; ஏழைகளுக்கும் ஆதரவு அற்றவர்களுக்கும் தாராளமாக தானங்களை அளித்தார்கள் பாண்டவர்கள். வந்தவர்கள் எல்லோரும் ஒருமனதுடன், “இப்படி ஒரு யாகத்தை நாங்கள் பார்த்ததேயில்லை” என்று புகழ்ந்து கொண்டிருந்தார்கள்.

எங்கிருந்தோ ஒரு குரல் கம்பீரமாக, “நீங்கள் தான் யாகத்தைச் சிறப்பாக நடத்திவிட்டீர்கள் என்று நினைக்கிறீர்களா? அது தான் கிடையாது!” என்று கேட்டது. எல்லோருக்கும் ஒரே ஆச்சரியம்! யார் இப்படி எதிர்மறையாக பேசுவது? அசரீரியோ?” என்று கூட நினைக்கத் தொடங்கினார்கள்.

குரல் வந்த திசையில் கீரிப்பிள்ளை ஒன்று “குருட்க்ஷேத்திரத்தில் எளியவர் ஒருவர் ஒரு படி மாவு தானம் செய்தார். அவர் செய்த தானத்தின் முன்னால் நீங்கள் எல்லா நாட்டோரும் கூடிச் செய்த இந்தப் பெரிய அசுவமேத யாகம் ஒன்றுமில்லை; ஏதோ பெரிய யாகம் செய்ததாகப் பெருமையடித்துக் கொள்கிறீர்கள்!” என்று சொல்லிவிட்டு அக்கீரியானது தன் வயிறு குலுங்கச் சிரித்தது.

இதில் ஏதோ சூதிருக்கிறது என்று, மன்னர்கள் சிலர் உடைவாளை உருவிக்கொண்டு, அந்தக் கீரிப்பிள்ளையை வெட்டி வீழ்த்த நெருங்கினார்கள். “நில்லுங்கள், நில்லுங்கள்” என்று தருமர் துள்ளிக் குதித்து அவர்களைத் தடுத்துக் கீரிப்பிள்ளையை நோக்கிக் குனிந்து, கீரியின் மேல் வாள் படாமல் தடுத்தார். “கீரிப்பிள்ளாய்! பெரியவர் செய்த பிடி மாவு தானம், இந்த அசுவமேத யாகத்தை விட எப்படிச் சிறந்தது? சொல்” என்று கீரியை ஆவலுடன் பார்த்தார் தருமர்.

எல்லோரும் கீரி என்ன சொல்லப்போகிறதோ என்று கீரியையே பார்த்தார்கள். அப்போதுதான் கீரி அபூர்வமானது என்று தெரிந்தது. கீரிப்பிள்ளையின் உடம்பில் ஒரு பக்கம் பொன் மயமாகப் பிரகாசித்தது. மறுபக்கம் பிற கீரிப்பிள்ளைகளைப் போலவே, சாம்பல் நிறத்தில் இருந்தது. அது தன் கூரிய சிறு வாயைத் திறந்து பேசியது: “குருக்ஷேத்திரத்தில் பாரதப் போர் தொடங்கும் முன் எளியவர் ஒருவர் இருந்தார். அவரும், அவரது மனைவி, ஒரே ஒரு மகன், மருமகள் ஆகிய நால்வரும் நோன்பு ஒன்றை அனுசரித்தார்கள்.” “அது என்ன?” என்ற கேள்விக்குறி அரண்மனை மண்டபத்தில் குழுமி இருந்த அனைவரின் முகத்திலும் படிந்தது. கீரி தொடர்ந்தது: “அந்த எளியவரும் அவரது குடும்பத்தினரும் நாள்தோறும் கீழே உதிர்ந்து கிடக்கும் தானியங்களைப் பொறுக்கி எடுப்பார்கள். கிடைத்த தானியத்தைச் சேர்த்து, ஒவ்வொரு நாளும் பிற்பகலில் சமைத்து, நால்வரும் பகிர்ந்து கொண்டு சாப்பிடுவார்கள். சில நாட்களில் தானியம் கிடைக்காமல் போகும்; அன்று சாப்பிடமாட்டார்கள். அடுத்த நாள் குறிப்பிட்ட நேரத்தில் கிடைக்கும் தானியத்தைத்தான் சமைத்து நால்வரும் பகிர்ந்துண்பார்கள். இப்படி ஒருவேளை சாப்பிடும் நோன்பை ஆண்டாண்டு காலமாக அனுசரித்து வந்தார்கள்.”

“இவ்வளவுதானா!” என்று தருமரின் நெருங்கிய நண்பரான மன்னர் ஒருவர், ஏளனமாக கீரிப்பிள்ளையைப் பார்த்தார். அவரைப் பார்த்துப் பதிலுக்குப் புன்னகை செய்துவிட்டுக் கீரிப்பிள்ளை தொடர்ந்து பேசியது: “ஒரு சமயம் பல நாட்கள் உணவுப் பொருட்கள் கிடைக்கவில்லை. ஒரு நாள், பசியோடு, வெய்யிலில் அலைந்த பிறகு, ஒரு படி சோளம் கிடைத்தது. அதை முறைப்படி பிற்பகலில் மாவாக்கிச் சமைத்து நால்வரும் சாப்பிட அமர்ந்தார்கள். அப்பொழுது செவிடான ஏழையொருவன் மிகுந்த பசியோடு வந்தான்.

தகுந்த நேரத்தில் வந்தாரே, என்று மகிழ்ச்சியுடன் வரவேற்று, அமரச் செய்து தனக்கு இருந்த உணவை அவருக்குப் படைத்தார் வீட்டுத் தலைவன். அதை அந்த ஏழை அவசர அவசரமாகச் சாப்பிட்டுவிட்டுப் பரிவோடு பார்த்தார். “இதையும் சாப்பிடுங்கள்” என்று மனைவி தன் பங்கைப் பரிமாரினாள். “அன்பானவளே! நீ பல நாள் பசியால் எலும்பும் தோலுமாக இருக்கிறாய். உன் பசியை நான் பார்த்துக் கொண்டிருக்க நேர்கிறதே!” என்றான், அந்த வீட்டுத் தலைவன். பரவாயில்லை என்று முகமலர்ச்சியுடன் கூற முயன்றாள். வந்தவன் குனிந்த தலை நிமிராமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். சாப்பிட்டு முடிந்ததும் மீண்டும் சாப்பாடு எங்கே இருக்கிறது? என்பது போலச் சுற்றிலும் பார்த்தான். அந்த வீட்டுப் பிள்ளை தன் பங்கையும் எடுத்துப் பரிமாறினான். வந்தவன் சாப்பிட ஆரம்பித்துவிட்டான். தந்தை ‘வயதானவர்கள் பசியைப் பொறுத்துக் கொள்ளலாம், வயதுப் பிள்ளையான உன்னால் முடியாதே!’ என்று கூறி வருந்தினான். தந்தை செய்த பணியைத் தொடர்ந்து செய்வது பிள்ளையின் கடமையல்லவா? என்று கூறிச் சிரிக்க முயன்றான் பிள்ளை. இதற்குள் வந்தவன், போட்டதைச் சாப்பிட்டு முடித்துவிட்டான். இலையை சுற்றும் முற்றும் பார்த்தான். வீட்டு மருமகள் தன் பங்கையும் இலையில் பரிமாறினாள். “என்ன காரியம் செய்தாய்? நீயும் பசித்திருக்க வேண்டியதுதானா?” என்றார் மாமனார். ‘கணவன் வழி செல்ல வேண்டியதுதானே என் கடமை’ என்று சாதுர்யமாகப் பேசிச் சமாதானப்படுத்த முயன்றாள். மருமகள் போட்ட உணவையும் சாப்பிட்டு முடித்தான் வந்தவன். அப்போதுதான் அவன் முகத்தில் மகிழ்ச்சியும் நிறைவும் தெரிந்தது. “நீங்கள் நீடுழி வாழ்வீர்கள். சொர்கத்திற்கு போவீர்கள்” என்று வாழ்த்திவிட்டுச் சென்றான். “அந்தச் சோற்று வாசனையை முகர்ந்ததாலேயே என் மூக்கு பொன்னானது. சிந்திய மாவில் புரண்டதால் உடலில் ஒரு பகுதி தங்கமயமானது. இங்கே வந்தால் உடலின் மற்றப் பகுதியும் தங்கமாகும் என்று நினைத்தேன், ஆனால் அப்படி எனக்கு ஆகவில்லை. அதனால் அசுவமேத யாகத்தை விட அந்தத் தானமே சிறந்தது” என்றது கீரிப்பிள்ளை. போரிட்டு வெற்றிக் கொண்டு அசுவமேத யாகம் செய்வதைவிடப் பல நாட்கள் பட்டினி இருந்தாலும் மற்றவர்களுக்கு உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே. அவர்களின் உள்ளம்தான் தங்கமானது, என்று இதிலிருந்து தெரிகிறதல்லவா?

நன்றி: காமகோடி ப்ரதீபம்

[ஜூலை 26-ஆம் தேதி சென்னையில் வளைகுடா நாடுகளிலிருந்து ஸத்ஸங்கத்திற்கு வந்த பக்தர்களுடன் ஸ்ரீஸ்வாமிஜி ஸத்ஸங்கம் நிகழ்த்தினார். அதில் ஒரு உன்னத உரையாடல்! ஒரு பக்தை ஸத்குரு ஸேவை பற்றி கேள்வி கேட்க, ஸ்ரீஸ்வாமிஜி அதற்கு அளித்த பதிலை சென்ற இதழில் கண்டு களித்தோம். அதே கேள்விக்கு ஸ்ரீஸ்வாமிஜி சொன்ன பதிலின் நிறைவை இந்த இதழில் இப்பொழுது காணலாம்.]

கைங்கர்யம் செய்யும் போது 'நான் தான் இந்த கைங்கர்யத்தை செய்கிறேன்' என்ற எண்ணமும் வருகின்றதே? இந்த எண்ணத்துடன் கைங்கர்யம் செய்வது சரியா? கைங்கர்யத்தையே நிறுத்திவிடலாம் என்று (feel) தோன்றுகிறதே! என்பது கேள்வி.

அதற்கு ஸ்ரீஸ்வாமிஜி அழகாய் பதிலளித்து, இறுதியில் "எந்தக் காரணத்தைக் கொண்டும் கைங்கர்யத்தை விட்டுவிடக் கூடாது. கைங்கர்யம் செய்யவில்லை என்றால் வேறு என்ன செய்வாய்? திரைப்படம், தொலைக்காட்சி என்று பார்ப்பாய். ஆதலால், எவ்வளவு ego வந்தாலும் பரவாயில்லை... JUST DO IT. கைங்கர்யத்தை விடாமல் செய்" என்று கூறி அந்தக் கேள்விக்கு தக்க பதிலளித்தார்.

# ஒரு உன்னத உரையாடல்

- M.K. ராமானுஜம்

மேலும் கேட்ட பக்தையைப் பார்த்து, அதற்கு ஒரு ஆச்சரியமான கோணத்தில் பதிலளிக்க ஸ்ரீஸ்வாமிஜி திருவாய் மலர்ந்தார். அந்த பதிலைக் கேட்ட பக்தையின் ஹ்ருதயமும் இதமாய் மலர்ந்தது.

ஸ்ரீஸ்வாமிஜி தொடர்ந்து சொன்னார் (ஒரு அழகிய, இதயத்தை வருடிக் கொடுக்கும் புன்சிரிப்புடன்), "எனக்கு மற்றொன்றும் தோன்றுகிறது. எப்போது ஒருவருக்கு தான் செய்கின்றோம் என்ற ego வரும்? ஒரு சுலபமான காரியத்தை செய்யும்போது வருமா? ஒரு சாதாரண செயல் நாம் செய்கின்றோம் என்று வைத்துக் கொள்ளுங்கள், உதாரணத்திற்கு, ஒரு பஸ்ஸில் எங்கோ செல்கின்றோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்த சாதாரண செயலினால் ego தலைத்தூக்குமா என்ன? நமக்கு நாமே ஏதோ ஒரு அரிய பெரிய காரியத்தை செய்கின்றோம் என்று நினைத்தால் தானே ego வரும்? (ஸ்ரீஸ்வாமிஜி சற்று நிறுத்தினார், எல்லோரும் கவனத்துடன் அடுத்த திவ்யமான வாக்கு என்ன வரப்போகிறதென்று, மழைத்துளிகளை எதிர்பார்க்கும் 'ஹோமா' பறவையைப் போன்று காத்துக் கொண்டிருந்தார்கள்.)

ஒரு மஹானுக்கோ ஸத்குருவிற்கோ கைங்கர்யம் செய்வது என்பது உண்மையில் அபூர்வமான ஒரு பாக்யம். கோவிந்தனுக்கு சேவை செய்யும் ஒரு உண்மை சத்குருவிற்கு, ஒரு உன்னத மஹானுக்கு சேவை செய்யும் பாக்யமானது கோடி ஜன்ம புண்யங்களால் மட்டுமே சாத்தியமாவதாகும். ஆகவே, குருவிற்கு கைங்கர்யம் என்பது அரிய பெரிய அபூர்வ விஷயமே என்பது உண்மையிலும் உண்மையே!

சாதாரண விஷயத்திற்கு ego எழாது. ஏதாவது ஒரு பெரிய காரியம் செய்தால்தானே ego எழும்? ஆக, குரு கைங்கர்யத்தின் போது ஒருவருக்கு ego வந்துவிடுகிறது என்றாலே எனக்கு என்ன தோன்றுகிறது என்றால், அவருக்கு குருவிற்கு செய்யும் ஒரு சிறு சேவை கூட பெரிய விஷயம் என்று தோன்றுகிறதால் தானே! ஆகவே, இந்த அரிய விஷயத்தை நீங்கள் உணர்ந்துள்ளீரே! அதனால் தானே ego வருகிறது!! Ego (அகங்காரம்) ஒரு பக்கம் இருக்கட்டும், சேவை செய்யும் பாக்யத்தை எக்காரணத்தைக் கொண்டும் விட்டுவிடாதீர்கள்!! குரு சேவையே ego-வையும் காலப்போக்கில் சரி செய்துவிடும்!!"

இதைக் கேட்ட அந்த மாதுவிற்கு எப்படி இருக்கும்! அவர் நினைத்தார், "குற்றம் சற்றும் பாராத கருணாமூர்த்தி அல்லவோ ஸத்குருநாதர். அஹோ பாக்யம்! அஹோ பாக்யம்!!" கண்களில் பணித்த நீர்த்துளிகளை தன் கைத்துணியால் துடைத்த வண்ணம், மஹாமந்த்ரத்தை முணுமுணுத்தார்.

ஒரு அழகான ஆழமான அமைதி நிலவியது. சில விநாடிகள் கழித்து மற்றொரு பக்தர் 'ராதே ராதே ஸ்வாமிஜி' என்று சொல்ல, ஸ்ரீஸ்வாமிஜியும் அவர் பக்கம் திரும்பினார். அடியேனுக்கு ஒரு கேள்வி... கேட்க தயங்கினார் அந்த அன்பர். ஸ்ரீஸ்வாமிஜியோ, "தயக்கமில்லாமல் கேளுங்கள்" என்று உற்சாகமூட்டவே, அவர் "நாம் இந்த பிறவியில் ஏதோ முன்ஜன்ம வினைப்பயனை அனுபவிக்கின்றோம்! எப்படி எந்த பூர்வ ஜன்ம வினைப்பயனை நாம் இப்போது அனுபவிக்கின்றோம் என்று எப்படி நிர்ணயிப்பது?"

ஸ்ரீஸ்வாமிஜி அதே புன்சிரிப்புடன் ஒரு கேள்வி கேட்டார், "for that you have to answer one question of mine first! Egg came first or chicken?" (இதற்கு நான் பதிலளிக்க வேண்டுமென்றால் என்னுடைய கேள்விக்கு முதலில் பதில் சொல்லுங்கள்! முதலில் முட்டை வந்ததா? கோழி வந்ததா?)

எல்லோரும் 'படார்' என்று சிரித்துவிட்டார்கள்!! பிறகு ஸ்ரீஸ்வாமிஜி இதற்கு அழகான விடையளித்தார்...

(தொடரும்)

பாட்டுக்குள் ஒரு கதை

# BRAKE

**(சென்ற இதழ் தொடர்ச்சி)**

**(பேராசிரியர் மேகநாதனுக்கு தனது மகன் ஸ்ரீ வத்ஸன் இயற்கையாகவே Psychology முதிர்ச்சியுற்றிருப்பது பெரும் மகிழ்ச்சியைத் தந்தது. அன்றாட வாழ்வில் நிகழும் நிகழ்வுகளைத் தனது மகன் பார்க்கும் கோணங்களை diary யில் பதிவு செய்யத் துவங்கினார். இதோ அவரது குறிப்புகளுள் மிகவும் ஆச்சர்யமான ஒரு குறிப்பு)**

**<u>அக்டோபர் 18 - தீபாவளி</u>**

**நானும் ஸ்ரீ வத்ஸனும் கடைத்தெருவிற்கு சென்றுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தோம். ஒரே மழை! போக்குவரத்து நெரிசல் வேறு! நாங்கள் சென்றுகொண்டிருந்த கார் நத்தையைப் போல் ஊர்ந்து சென்றது. அதிலும் ஒரு தெருவில் திடீரென்று ஒரு சிறுவன் குறுக்கே வர, sudden brake போட்டார் அந்த ஓட்டுனர். சென்ற மாதம் ஸ்ரீவத்ஸனுடன் ஏற்பட்ட அனுபவத்திற்குப் பிறகு, மற்றவர்களை விமர்சிப்பது என்பது என்னிடம் குறைந்திருந்தது. குறுக்கே வந்த சிறுவனைப் பார்த்தேன். ஓட்டுனர் மீது ஏதும் கோபம் வரவில்லை. ஒருவாறாக நெடுஞ்சாலை வந்தடைந்தோம். அப்பாடா! இப்போதுதான் கார் மாட்டுவண்டி போலல்லாமல் காரைப் போல் வேகமாய்ப் பறந்தது. ஸ்ரீவத்ஸனைப் பார்த்தேன். I know that look!! அவன் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியதைக் கண்டேன். மெதுவாக அவனைப் பார்த்து**

“ஸ்ரீவத்ஸா! என்ன சிந்தனை?”

“அப்பா! காரில் brake ஏன் இருக்கிறது என்று நினைக்கிறீர்கள்?"

“காரை நிறுத்த.. ஹூம்.. வேகத்தைக் கட்டுப்படுத்த" என்றேன்.

ஸ்ரீ வத்ஸன் சொன்னான், “அது உண்மைதான். எனக்கு என்ன தோன்றுகிறது என்றால், brake ன் முக்கிய நோக்கமே கார் வேகமாகச் செல்லவேண்டும் என்பது தானே!” என்றான்.

“ஸ்ரீவத்ஸா! என்ன சொல்கிறாய்?”

“நீங்களே நினைத்துப் பாருங்கள்! Brake இல்லையென்றால் இவ்வளவு வேகம் செல்லத் துணிவோமா நாம்? brake இருக்கிறது என்ற பாதுகாப்பு உணர்வினால் நாம் வேகமாய்ச் செல்ல விழைகிறோம் அல்லவா? எனக்கு நீங்களோ, ஆசிரியர்களோ, சில நண்பர்களோ நான் எடுக்கும் முயற்சிகளை, செய்யும் செயல்களைப் பற்றிக் கேள்விகளை எழுப்பும்போது அவைகளை என் முன்னேற்றப் பாதையில் முட்டுக்கட்டை என்று நினைத்ததுண்டு. ஆனால் இப்போது புரிகிறது, நீங்கள் எல்லாரும் இப்படி எனது முடிவுகளை, செயல்களைப் பற்றி கேள்விகள் கேட்பதால்தானே நான் நிம்மதியாய் என் முன்னேற்றப் பாதையில் வேகமாய்ச் செல்ல முடிகிறது. இப்படி brake இல்லையென்றால் நான் வழிதவறி வேறு பின்னோக்குப் பாதையிலோ, படுகுழியிலோ அல்லவா விழுந்திருப்பேன்? நீங்கள் என்னைக் கண்காணித்து அவ்வப்போது கேள்விகள் கேட்கிறீர்கள் என்ற மன உறுதிப்பாடுதான் நான் எனது முன்னேற்றப் பாதையில் நிம்மதியாய் செல்வதற்குக் காரணம். இனி நீங்கள் என்னை ஏன் இப்படி செய்கிறாய்? என்றெல்லாம் கேட்கும்போது நீங்கள் என்னை கட்டுப்படுத்துகிறீர்கள் என்றெல்லாம் நினைக்காமல், எரிச்சலடையாமல் உண்மையில் நன்றியோடு அதை எதிர்கொள்வேன்.”

“எப்படி brake காரில் வேகமாய்ச் செல்லக் காரணமாகிறதோ, அப்படி நீங்கள் கேட்கும் கேள்விகளை நான் தடைக்கல்லாகப் பார்க்காமல் படிக்கல்லாகவே பார்ப்பேன். என்ன அப்பா சரிதானே!”

வாயடைத்துப் போனேன் நான்.
என் தலை மட்டும் ஆனந்தமாய் அசைந்ததாக ஞாபகம்.





புரட்டாசி சனிக்கிழமை, ஸ்ரீ கல்யாணஸ்ரீனிவாச பெருமாள் கோவில், மஹாரண்யம், 14 Oct






குமாரி ரம்யா ராம்நாத்தின் நடன நிகழ்ச்சி, அயோத்யா மண்டபம், சென்னை, 22 Oct

ஸ்ரீ ராமானுஜம்ஜியின் Voice of Harmony Workshop, அபு தாபி





பூர்ணிமாஜியின் டொரோண்டோ சத்சங்கங்கள் 2-18 October




புராநவா, மதுரை 7 Oct

மாதம் ஒரு
சம்ஸ்க்ருத வார்த்தை

# குரு

# ‘गुरु’

- ஸ்ரீ விஷ்ணுப்ரியா

‘குரு’ என்ற வார்த்தை பொதுவாக ஆசார்யனைக் குறித்த போதிலும், அந்த வார்த்தைக்கு என்ன அர்த்தம் தெரியுமா? ‘குரு’ என்றால் மிகவும் பெரியது, முக்யமானது, கனமானது, சிறந்தது, மதிக்கத் தக்கது என்றெல்லாம் பொருள். அதனால்தானோ என்னவோ அப்பேர்பட்டவரான ஆசார்யனை ‘குரு’ என்று கூறுகிறோம்.

‘மிகவும் பெரிய’, ‘முக்யமான’ — என்ற அர்த்தத்தில் ஸ்ரீமத்பாகவதத்தில் வரும் ஒரு அழகான ஸ்லோகம் பார்ப்போமா? பாகவதத்தில் ஒரே ஸ்லோகத்தில் முழு ராமாயணத்தையும் சொல்லுகிறார் சுகர்.

‘குர்வர்தே த்யக்தராஜ்யோ வ்யசரத் அனுவனம்....’ என்று நவம ஸ்கந்தத்தில் ஒரு ப்ரிஸித்தமான ஸ்லோகம் உள்ளது. இங்கு ‘குர்வர்தே’ என்று ஆரம்பிக்கின்றது.

‘குரு’ என்ற சப்தத்தை அறியாதவர் யார்? எல்லோரும் அறிவர். வாழ்கையில் குரு இல்லாதவர்களே இல்லை என்று சொல்லலாம். ஒரு ஆன்மீக குருவை இன்னும் அடையாதவர்கள் கூட, லௌகிக வாழ்கையில் குரு இல்லாமல் இருந்திருக்க மாட்டார்கள். ஏனெனில் எந்த ஒரு வித்தையுமே குரு இல்லாமல் நமக்கு ஸித்திக்காது. அது தான் ‘குரு’ என்பவரின் விசேஷம்.

'குரு அர்த்தே த்யக்தராஜ்யோ' – என்றால், குருவான தனது தந்தையின் பொருட்டு ராஜ்யத்தை விட்டார் ராமர் என்று அர்த்தம். அல்லது 'ஸத்யம்' என்று மிகப் பெரிய காரணத்திற்காக (குரு அர்த்தே) ராஜ்யத்தை துறந்தார் என்று பொருள். 'தர்மம்' என்ற முக்யமான காரணத்திற்காக (குரு அர்த்தே) துறந்தார் என்றும் பொருள் கொள்ளலாம். ஆக 'குரு' என்றால் முக்யமானது என்று பார்த்தோம்.

'குரு' என்றால் கனமானது என்றும் பொருள். 'கரிமா' என்று ஒரு யோக சித்தி உள்ளது, தன்னையே மிகவும் கனமாக ஆக்கிக் கொள்வது என்பது தான் அந்த சித்தி. அந்த 'கரிமா' என்ற சொல் 'குரு' அதாவது 'கனமானது' என்ற சப்தத்திலிருந்து தான் உண்டாகிறது.

அதே போல், த்ருவ சரித்ரத்தில் நாரதர் த்ருவனுக்கு உபதேசம் செய்யும் போது – 'அபித்யாயேத் மனசா குருணா குரும்' என்கிறார். 'குருணா மனஸா' – அதாவது பக்குவமான, கனமான, தைர்யமுள்ள மனதால் 'குரும்' – குருவான பகவானை த்யானம் செய்! என்று அழகாக உபதேசிக்கிறார்.

ஸம்ஸ்க்ருத வ்யாகரணத்தில் (Sanskrit Grammar) 'குரு' என்ற வார்தைக்கு வேறு பொருள் உள்ளது. அக்ஷரங்களில் 'லகு' 'குரு' என்று இரண்டு பேதம் உள்ளது. 'Short' and 'Long' vowels என்று ஆங்கிலத்திலும் உண்டு. அது போல் 'குரு' என்றால் 'நீண்டது', long என்று அர்த்தம்.

'அ' என்றால் 'லகு'. 'ஆ' என்றால் 'குரு'. அதுபோல், எல்லா அக்ஷரங்களிலும் இரண்டு மாத்திரை இருப்பதெல்லாம் 'குரு'– நீண்டவை. ஸ்லோகங்களின் சந்தஸ் (Metre) பொருத்த வரை, இந்த 'லகு' 'குரு' என்பவை முக்யமானதாகும்.

கடைசியாக ஒரு அர்த்தம் பார்ப்போம். க்ரஹங்களுக்குள் 'குரு' என்றால் ப்ருஹஸ்பதி என்று அர்த்தம். அதாவது planet JUPITER ஐ தான் 'குரு' என்று கூறுவோம். ப்ருஹஸ்பதி தேவ குருவாக இருப்பதாலும் அப்படி பெயர். JUPITER Heavy Planet, கனமான க்ரஹமாக இருப்பதாலும் அப்படி பெயர் இருக்கலாம்.

அதனால்தான் வியாழக்கிழமைக்கு (Thursday) ஸம்ஸ்க்ருதத்தில் 'குருவாஸரம்' என்று பெயர். ஏனென்றால் அது ப்ருஹஸ்பதிக்கு உகந்த கிழமை.

இவ்விதம் பல அர்த்தமுள்ள இந்த சொல்லிருந்து குருகுலம், குருசுஶ்ருஷா, குருதக்ஷிணை என்ற சொற்களும் ப்ரஸித்தமானவைதான்.

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Ltd**

# செய்திகள்

## ப்ரேமிக பவனத்தில் ஸ்ரவண தீபம்

செப்டம்பர் 30, 2017

**சென்னை ப்ரேமிக பவனத்தின் ப்ரதிஷ்டா தினத்தன்று ஸ்ரீ ஸ்வாமிஜி ஸ்ரவண தீபம் ஏற்றி, புரட்டாசி சனிக்கிழமை மற்றும் விஜயதசமி உத்சவத்தை கொண்டாடினார்கள்**

## குடியாத்தம் சத்சங்கம்

அக்டோபர் 1, 2017

**குடியாத்தம் கல்லூர் கிராமத்தில் பஜனை மடத்தில் மஹாமந்திரம் ஒலிக்க குழந்தைகள் மத்தியில் ஸ்ரீ ஸ்வாமிஜி விஜயம் செய்தார். அதன் பின்னர் KMG கல்லூரி வளாகத்தில் புரட்டாசி ஸ்ரவண தினமாக இருந்ததால் திருப்பதி ஸ்ரீ ஸ்ரீநிவாச பெருமாள் வைபவத்தை உபந்யாசம் செய்து, மஹாமந்திர கூட்டுப் பிரார்த்தனையுடன் பூர்த்தி செய்தார்.**

## புரட்டாசி மாதம்

அக்டோபர் 14, 2017

**புரட்டாசி மாதம் கடைசி சனிக்கிழமை மஹாரண்யம் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாச பெருமாள் சந்நிதியில் மிக விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. பல ஊர்களிலிருந்து சுமார் 2000 பக்தர்கள் வந்து தங்கள் புரட்டாசி மாத விரதத்தை பூர்த்தி செய்தார்கள். ஸ்ரீ பம்மல் பாலாஜி அவர்கள் மிகவும் அருமையாக ஏற்பாடுகளை செய்திருந்தார். அவர் மஹாமந்திரக் கூட்டுப் பிரார்த்தனை நடத்தி நம் பெருமாள் பல விதங்களில் தன்னை அண்டிய பக்தர்களை காத்து வரும் லீலைகளை பகிர்ந்துகொண்டார். வந்திருந்த அனைத்து அடியார்களுக்கும் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், தனது திருக்கரங்களாலேயே லட்டு பிரசாதம் அருளினார்.**

## தீபாவளி

அக்டோபர் 18, 2017

**ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிக வரதனுடன் தீபாவளி கொண்டாடினார்கள். மாலையில், நாராயண ஸரஸ் தீர்தத்தில் தெப்போற்த்சவம் நடைபெற்றது.**

# செய்திகள்

## ஸ்ரீ ஸ்வாமிஜியின் திருநட்சத்திரம்

அக்டோபர் 21, 2017

**ஸ்ரீ ஸ்வாமிஜியின் திருநக்ஷத்திர நாளன்று ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு கோவிந்த பட்டாபிஷேகம் மற்றும் அன்னக்கூடோத்சவமும் நடத்தினார்கள். திருவண்ணாமலை யோகி ராம்சுரத்குமார் ஆஸ்ரமம் Justice ஸ்ரீ TS அருணாச்சலம் அவர்கள் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்கு புஷ்பவர்ஷம் செய்தார்கள்.**

**மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி கைங்கர்ய சபா சார்பில் அயோத்யா மண்டபத்தில் நகர கீர்த்தனம், ஜபஹோமங்கள், பாதுகா பூஜை, வேத பாராயணம், ஸ்ரீமதி க்ருத்திகா பரத்வாஜின் சங்கீத உபந்யாசம் மற்றும் ஸ்ரீமதி ரேணுகா ராம்நாத் அவர்களின் புதல்வி குமாரி ரம்யா ராம்நாத்தின் நடன நிகழ்ச்சியும் நடைபெற்றது.**

---

**செப்டம்பர் 28 - அக்டோபர் 8**

**ஸ்ரீ ராமானுஜம்ஜி தொடர்ந்து 10வது ஆண்டாக அபுதாபி மற்றும் துபாயில் சத்சங்கம் நடத்தினார். பாகவத ரஹஸ்யம் என்ற தலைப்பில் அவர் உபந்யாசம் செய்து, வெண்ணை தாழி உத்சவம் மற்றும் ராதா கல்யாண உத்சவத்தை அநேக பக்தர்களுடன் கொண்டாடினார். Voice of Harmony என்ற தலைப்பில் அபுதாபியிலும், Communicating Harmoniously என்ற தலைப்பில் துபாயிலும் corporate workshops நடத்தினார்.**

**அக்டோபர் 2-17**

**2-8 Oct, பூர்ணிமாஜி USA-எட்மோண்ட்டனில் ஷீர்டி சாய் பாபா கோவிலில் ஸ்ரீமத் பாகவத சப்தாஹம் மற்றும் உபந்யாசம் செய்தார். 12-17 Oct பூர்ணிமாஜி USA-டொரோண்டோவில் ஸ்ரீ சிவ சத்யநாராயணா கோவிலில் 'க்ருஷ்ண லீலா' என்ற தலைப்பில் உபந்யாசம் செய்தார்.**

**அக்டோபர் 2**

**அணைக்கட்டில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு டெங்கு காய்ச்சலுக்கான மருந்துகள் இலவசமாக கொடுக்கப்பட்டன. 26 நபர்களுக்கு கண் அறுவை சிகிச்சையும் இலவசமாக நடத்தப்பட்டது.**

# செய்திகள்

**அக்டோபர் 9-16**

**ஸ்ரீ முரளி அவர்கள் காரைக்குடியில் 11 பள்ளிகளில், சோளிங்கர் மற்றும் வேலூரில் 3 பள்ளிகளில் 10400 மாணவ மாணவியருக்கு ஊக்கமளிக்கும் உரை நிகழ்த்தினார்.**

**அக்டோபர் 7**

**மதுரையில் புராநவா இறுதி சுற்று மஹாத்மா காந்தி பள்ளியில் நடைபெற்றது. 3250 மாணவ மாணவியர்களிலிருந்து 23 அணிகள் அரை இறுதி சுற்றிற்கு தேர்வு பெற்றனர். இறுதி சுற்றிற்கு தேர்வான 6 அணிகளில் தூத்துக்குடியின் காரப்பேட்டை நாடார் பள்ளி வெற்றிபெற்றது. திருமதி.வினேகா வினா விடைப் போட்டியை மிக சிறப்பாக நடத்தினார். திரு.வெங்கட்ராமன் அவர்கள் சிறப்பு விருந்தினராக வந்திருந்து வெற்றிபெற்ற குழந்தைகளுக்கு பரிசளித்தார். Dr.ஜனனி வாசுதேவன் மற்றும் ஸ்ரீமதி சுஜாதா மணிகண்டன் GOD India சார்பில் பங்கேற்றனர். Dr.ஜனனி தூத்துக்குடி நாமத்வாரில் ஸ்ரீ ஸ்வாமிஜியின் மதுரகீதங்களின் மீதான லீலானுபவம் என்ற தலைப்பில் உபந்யாசம் செய்தார்.**

**செப்டம்பர் 14-20: கன்யா சகோதரிகளின் ஸ்ரீமத் பாகவத உபந்யாசம் நங்கநல்லூர் மதுரமுரளி பார்ட்டி ஹாலில் நடைபெற்றது.**
**அக்டோபர் 10-16: கன்யா சகோதரிகளின் ஸ்ரீமத் பாகவத உபந்யாசம் அண்ணா நகரில் நடைபெற்றது.**


HUMBLE PRANAMS AT
THE LOTUS FEET OF GURUJI
DR SHRIRAAM MAHADEVAN
Consultant Endocrinologist
Endocrine & Speciality Clinic
Sri Ganesh Flats, Flat No 4, Ground floor,
Old no.72, New No 460, TTK Road, Alwarpet, Ch - 18
Tel: 044-24350090, Mob: 9445880090
Email: mshriraam@gmail.com,
www.chennaiendocrine.com

# புதிய வெளியீடுகள்

நம் குருநாதரின் கீர்த்தனங்களான

## மதுரகீதம்

VOL 21

- சேலம் ஸ்ரீ ஸ்ரீராம்

விலை:

Rs 100/-




நம் குருநாதர் அவர்களின் திவ்ய சரித்திரம்


## மதுரஸ்மரணம்


My Guru As I See Him

- Dr பாக்யநாதன்ஜி

விலை:

Rs 100/-




தசமஸ்கந்தத்தின் ஆங்கில விளக்கஉரை

## ஆஷ்ரயம்

- குமாரி சங்கீதாஜி

விலை:

Rs 500/-




குருநாதரின் மேல் பக்தர்கள் இயற்றிய கீர்த்தனைகள்

## குரு கீர்த்தனங்கள்

Vol 8

குமாரி துங்கவித்யா, குமாரி ராகவி, குமாரி ராகசுதா

விலை: Rs 100/-

**கிடைக்கும் இடம்,**

MADHURAM STORES
Door No 4/11 Netaji Nagar Main Rd,
Jafferkhanpet, Chennai - 83
Ph: +9144 24895400/ 9442613710

ஒருமுறை, ஒரு வணிகர் வீட்டில் தன்னுடைய மடிக்கணினியில் அலுவலக வேலையில் ஆழ்ந்து ஈடுபட்டிருந்தார். அப்பொழுது, அவருடைய அழகான சிறு பெண் குழந்தை அவரை தன்னுடன் விளையாடுமாறு தொல்லை செய்ய ஆரம்பித்தாள். தந்தையோ வேலையில் மிகவும் மும்முரமாக இருந்தார். அவர் அந்தக் குழந்தையை வேறு எதையாவது வைத்துக் கொண்டு விளையாடச் சொல்ல, அதற்கு அந்தக் குழந்தை, "ஏன், நீங்களே எனக்கு எதையாவது விளையாடக் கொடுங்களேன்", என்று கூறினாள். தந்தை பதட்டமடைந்து, சுற்றும் முற்றும் பார்த்தார். அங்கு, உலக வரைபடம் உள்ள ஒரு செய்தித்தாள் கிடந்தது. அவர் உடனே அதை எடுத்து, பத்து துண்டுகளாகக் கிழித்து தன் மகளிடம் கொடுத்து, "குழந்தாய்! இந்த உலக வரைபடத்தை எப்படியாவது சரியாகப் பொருத்தி அமைத்து, அதை ஒட்டி எடுத்துக் கொண்டு வா. பிறகு அப்பா உன்னுடன் விளையாடுகிறேன்", என்று கூறினார். இதை செய்து முடிக்க தன் பெண்ணிற்கு சில மணி நேரமாவது ஆகும் என்று எதிர்பார்த்தார். ஏனெனில், அவள் முதலாம் வகுப்பில்தான் படித்துக் கொண்டிருந்தாள். ஆனால், அவரை வியப்படைய வைப்பது போல், அவரின் பெண் குழந்தை அந்த உலக வரைபடத்தை சரியான அமைப்புடன் பொருத்தி, ஒரு சில நிமிடங்களில் எடுத்து வந்திருந்தாள். அந்த உலக வரைபடம் மிகவும் சரியாக பொருத்தப்பட்டிருந்தது. தந்தைக்கு ஒரே வியப்பு. அவர், "உனக்கு உலக வரைபடத்தைப் பற்றி எப்படித் தெரியும்?", என்று கேட்டார். அதற்கு அவள், "உலக வரைபடமா? எதைப் பற்றி பேசுகிறீர்கள்?", என்று வினவினாள். பிறகு, அவள் அந்த படத்தை திருப்பி, அதில் நன்றாக உடையணிந்த ஒரு மனிதரின் புகைப்படம் இருப்பதைக் காண்பித்தாள். "நான் இந்த மனிதரை மட்டும்தான் சரியாகப் பொருத்தினேன். அதன் பின்பக்கம் தான் இந்த உலக வரைபடம் உள்ளது. அது தானாகவே ஒழுங்கான அமைப்பிற்கு வந்து விட்டது", என்று அவள் கூறினாள்.

மனிதனாக இருக்கும் நம்மை ஒழுங்குப்படுத்திக் கொண்டால், உலகம் தானாகவே ஒழுங்காகிவிடும், என்று தந்தை புரிந்துக் கொண்டார்.



If you put
the human being
which is me in order,
the world will find
its own order

**- M.K. ராமானுஜம்**

# பாரம்பர்ய பொக்கிஷங்கள்

## இராணியின் படிக் கிணறு

*Rani Ki Vav* - என்றழைக்கப்படும் இராணியின் படிக் கிணறு என்பது, இந்திய துணைக்கண்டத்தில் ஒரு தனித்தன்மை வாய்ந்த, சரஸ்வதி நதிக்கரையிலுள்ள, குஜராத் மாநிலத்தில் பதான் நகரத்தில் நிலத்துக்கடியில் அமையப் பெற்ற ஒரு நீர் மேலாண்மை அமைப்பாகும்.

இது, கோவிலின் தலைகீழான வடிவ அமைப்புடன், சமயத் தொடர்புள்ள; நீரின் புனிதத் தன்மையை வலியுறுத்தும் ஒரு செயல்படு திட்டமாக பதினொன்றாம் நூற்றாண்டில் ஒரு நினைவுச் சின்னமாகக் கட்டப்பட்டது. இது, ஒரு ஏழு அடுக்குகள் கொண்ட, அழகிய கலைநயம் மிக்க சிற்பங்கள் மற்றும் படிகளால் அமையபெற்ற நீர் மேலாண்மை அமைப்பாகும். இது, ஒரு படிக் கிணற்றிற்கு உரிய அனைத்து அம்சங்களுடன் கிழக்கு-மேற்காக அமைந்துள்ளது. இதனுடைய படிகளுடன் அமையப்பெற்ற தாழ்வாரம் கீழ்தளத்தில் துவங்குகின்றது. தொடர்ச்சியாக அமையப்பெற்ற 4 பார்வை மண்டபங்கள் மேற்கு முகத்தில் ஏறு முகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கிணறு சுரங்கத்தைப் போன்ற தண்டு அமைப்பை ஒத்துள்ளது. சமயம், புராண மற்றும் இலக்கியம் சார்ந்த சுமார் ஐநூறு முதன்மை மற்றும் ஆயிரம் உப சிற்பங்கள் காணப்படுகின்றன.

ஒரு கலை நயம்மிக்க படைப்பாக நம்மை வியப்பில் ஆழ்த்துவதொடல்லாமல், நீராதாரத்தைப் பெருக்குவதற்கான உறுதியான வடிவமைப்புடன், தொழில்நுட்ப சாதனையாகவும் விளங்கும் ஒரு எழில்மிகு தனித்துவப் படைப்பாகும். கிணற்றின் உட்புற கலைநயத்தை, கருத்தாழம் மிக்க சிலைகள் மற்றும் படைப்புகள்; நீர் நிரம்பிய மற்றும் நிரம்பாத பகுதிகளின் விகிதாசாரம் ஆகியன தனித்துவத்துடன் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. தரையிலிருந்து உடனே செங்குத்தாக கீழிறங்கும்படி அமையப்பெற்ற கிணற்றின் அமைப்பானது கிணறு அமைந்துள்ள சூழ்நிலையை மேலும் மெருகூட்டச் செய்கின்றது.



Photo Courtesy: Amusing Planet

கலைநயத்தின் உச்சமாகவும், படிக்கிணறு தொழில்நுட்பத்தின் உச்சமாகவும் இராணியின் படிக்கிணறு விளங்குகின்றது. இக்கிணறானது சமய, புராண மற்றும் சமய சார்பற்ற படைப்புகாளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. தேர்ந்த கைவினையாளர்களின் கருத்தாழம் மிக்க படைப்பாக இது விளங்குகின்றது. இக்கிணறானது, செயல்படக்கூடிய; கலைநயம் மிக்க; நுண்ணறிவு கொண்ட மனிதனின் அழகிய கருத்தாழம் மிக்க படைப்பாக ஒரு கட்டடக்கலையின் நினைவுச் சின்னமாகத் திகழ்கின்றது. இராணியின் படிக்கிணறானது, நீர் சேமிப்பு மற்றும் ஆதாரத்திற்காக, இந்தியா முழுவதும் பெரும்பாலும் பரவி புழக்கத்திலிருந்த, ஆழ் கிணற்றுக் கட்டமைப்பிற்கு ஒரு முக்கிய உதாரணமாக விளங்குகின்றது. தண்ணீர் தேவைக்காக மனித சமூகம் நிலத்தடி நீரை பெரும்பாலும் நம்பியிருந்த காலகட்டத்தில், அதிலும் குறிப்பாக கிணறுகளை ஆதாரமாகக் கொண்டு நீரின் தேவையை பூர்த்தி செய்து கொண்டிருந்த சமயத்தில், இக்கிணறானது தொழில்நுட்பம், கட்டமைப்பு மற்றும் கலைகளின் உச்சப் படைப்பாக அமைந்தது. ஒரு செயல்படக்கூடிய, கட்டட உருவியலுடன் கூடிய (Functional Architectural Typology) கோவிலைப் போன்ற தோற்றமானது, தண்ணீரின் புனிதத்தன்மையை பேணுவதாகவும் இயற்கை வளத்தை போற்றுவதுமாகவும் உள்ளது.

இராணியின் படிக்கிணறானது பல நிலைகளில் பிரம்மாண்டமாக அமையப்பெற்ற பார்வை மண்டபங்களைக் கொண்டிருந்தாலும் அதனுடைய பெரும்பான்மையான கட்டட உட்கூறுகளுடன் அதன் மூல வடிவத்தில் பேணப்பட்டுள்ளதைக் காணலாம். பெரும்பான்மையான சிலைகள் மற்றும் அலங்கார பலகைகள் அதன் ஆதி இருப்பிலேயே இருப்பதுடன் சில மிக உயர்ந்த நிலையில் பராமரிக்கப்பட்டுள்ளது. இக்கிணறாணது படிக்கிணறிற்கு ஒரு மிகச் சிறந்த உதாரணமாக அமைந்தாலும், சரஸ்வதி நதிதீரத்தில் 13வது நூற்றாண்டில் ஏற்பட்ட நிலத்தடி பாறைகளின் இட/அமைப்பு மாறுதல்களால் இக்கிணறானது இன்று ஒரு கிணறாக செயல்படாத நிலையில் உள்ளது. கடந்த 7 நூற்றாண்டுகளாக, முற்காலங்களில் ஏற்பட்ட வெள்ளத்தினால் படிந்த வண்டல் மண் படிவுகளால் பாதுகாக்கப்பட்டுள்ளது. இக்கிணற்றிற்கு சொந்தமான அனைத்து உட்கூறுகளுடன், செங்குத்தாக அமையப்பெற்ற இக்கிணற்றை ஒட்டிச் சூழ்ந்த மண் முதற்கொண்டு இன்றும் காணப்படுகின்றது. 13ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட இயற்கை சீர்கேட்டினால் பெரிய இழப்புகள் இக்கட்டமைப்பிற்கு ஏற்பட்டதாகத் தெரியவில்லை. பதானைப் போன்ற பிற புறநகரங்கள் கலாச்சார மாறுபாடுகள் அடையும்பொழுது, இக்கிணற்றின் ஒருங்கமைவு வருங்காலங்களில் காக்கப்பட வேண்டும்.


இராணியின் படிக்கிணறானது மூலப் பொருள், வடிவம், வேலைப்பாடு ஆகியவற்றில் மிக உயர்ந்த அதே பழைய உண்மைத்தன்மையுடனும் அமைப்பு, சூழ்நிலை மற்றும் இருப்பிடம் ஆகியவற்றைப் பொறுத்தவரை ஓரளவிற்கு பழமையுடன் இன்று விளங்குகின்றது. அதே பழைய புராதனமானப் பொருட்களைக் கொண்டு பராமரிக்கப்பட்டாலும், அதனுடைய கட்டட ஸ்திரத்தன்மையை பராமரிக்கவேண்டி, மீள் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. புராதனமான சிலைகளை காக்கவேண்டியே மீள் கட்டுமான வடிவங்களை சேர்க்க வேண்டியுள்ளது. மீள் கட்டுமான வடிவங்கள் எல்லாம் எந்த ஒரு சிறப்பு அலங்காரங்கள் இல்லாமல் ஒரு வழ வழப்பான மேற்பரப்பாகக் காணப்படுவதினால் புராதானப் படைப்புகளுக்கும் இதற்கும் வேறுபாடு எளிதில் அறிய முடிகின்றது. மழைப் பொழிவின்போது ஏற்படும் மணல் சரிவைத் தடுப்பதற்காக, தரைதள வெளிப்புறத்தில், ஒரு சீரான இறக்க சரிவு அமைக்கப்பட்டுள்ளது. துரதிஷ்ட வசமாக, சரஸ்வதி நதி அமைவிட மாறுதலால் இன்று கிணறானது அதன் செயல்பாடு மற்றும் உபயோகத் தன்மையில் பழைய உண்மைத்தன்மையை கொண்டு விளங்க வில்லை.


Courtesy: www.unesco.org

сѕѕсЄѕсЄцсЄцЯЕЇЯ«»ЯЕЇЯ«» Я««Я«╣Я»ѓЯ«░Я«ЙЯ«фЯ»ЇЯ«░Я«фЯ»Ђ - 14

## Я«цЯ«┐Я«░Я»ЂЯ«ЋЯ»ЇЯ«ЋЯ«▓Я»ЇЯ«»Я«ЙЯ«БЯ««Я»Ї

Я«ЊЯ«хЯ«┐Я«»Я«░Я»Ї : Я«ЋЯ»ІЯ«хЯ«┐





சசி மாதா வீட்டிற்கு ஒரு பிராமணர் வந்தார்.
பண்டிதர் வல்லபதாசருடைய பெண் லக்ஷ்மியை நிமாயிக்கு சம்மதம் செய்யலாமா? நிமாயிக்கு ஏற்றவள். உங்களுக்கு சம்மதமா?
நிமாயியின் அபிப்ராயம் அறியாததால் அவள் தனது விருப்பத்தைத் தெரிவிக்கவில்லை.
இப்பொழுது தான் பாடசாலை ஸ்தாபித்து உள்ளான். சில நாட்கள் ஆகட்டுமே.
உங்கள் விருப்பம்..மாற்றம் இருந்தால் தெரியப்படுத்துங்கள்..
வல்லபதாசர் ஏழை என்பதால் புறக்கணித்தாளோ? ஆனால் சசி மாதாவின் குணம் அது அல்லவே..
பெரியவரே! என்ன இந்தப் பக்கம்?
வல்லபதாசரின் புத்திரியான லக்ஷ்மியை பற்றி தங்களின் அபிப்ராயம் என்ன?
நிமாயி பதில் கூறாமல் சிரித்துக் கொண்டே உள்ளே சென்றார்.
உள்ளே சென்று சசி மாதா விடம் கேட்டார்.
அம்மா! பிராமணர் முகம் வாடி உள்ளதே..அவர் சொன்ன சம்பந்தத்தை நிராகரித்து விட்டீரோ?
இக்கேள்வியிலிருந்தே நிமாயியின் எண்ணத்தைப் புரிந்துகொண்டு. பிராமணருக்கு நற் செய்தி அனுப்பினாள்.


தங்களுடைய பெண்ணை நிமாயிக்கு கொடுக்க சம்மதமா?
நிமாயி மிகவும் பெரிய பண்டிதர் ஆயிற்றே! லக்ஷ்மிக்கு ஏற்ற பொருத்தம் தான். ஆனால் அவர்கள் எங்களுடைய ஏழ்மையைப் பற்றி அறிவார்களா?
நிச்சயம் அறிவார்கள். அவர்களுக்கு இந்த சம்பந்தத்தில் மிக சந்தோஷம்.
அப்படியானால் நான் உடனே சசி மாதாவிடம் அதைப் பற்றி பேசுகின்றேன்.
சசி மாதாவிடம் பேசிவிட்டு திருமண--த்திற்கு ஒரு நன்நாளை நிச்சயித்தார்.
பெரியவர்களுடைய ஆசியுடன் நிமாயி, லக்ஷ்மி தேவி திருமணம் இனிதே நிறைவேறியது. ஊரே மிகவும் மகிழ்ச்சியுடன் தம்பதியரை மனமார வாழ்த்தினர்.

# பழத்ததில் பிழத்தது

## An exhibition in London explores the rich history of India's contributions to science

October 4, 2017
The Hindu Business Line

அறிவியல் துறைக்கு இந்தியாவின் பங்களிப்பைப் பற்றி பேசுவதற்கு இதை விட வேறு நல்ல தருணம் கிட்டாது.
கடந்த சில மாதங்களாக இந்தியாவின் தொன்மை மற்றும் மூடப்பழக்க வழக்கங்களைப் பற்றி பரவலாக பேசப்பட்டுவருகின்றது. அதே சமயம், உண்மையான ஆராய்ச்சிகளை நடத்துவதற்கான நிதி உதவியும் குறைந்து கொண்டே வருகிறது.

இத்தருணத்தில், லண்டனில் உள்ள அறிவியல் அருங்காட்சியகம் ஒன்று, இந்தியாவின் எழுபதாம் ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு, "Illuminating India" என்ற கண்காட்சியின் மூலம் 'பூஜ்யத்தின்' மிகப் பழமையான ஆவணம் என்று சமீபமாக கண்டுபிடிக்கப்பட்ட "Bakhshali" கைப்பிரதி மற்றும் செடிகளின் அசைவுகளை ஆராயப் பயன்படுத்தப்படும் ஜெகதீஷ் சந்திர போஸின் "Oscillating Plate Phytograph" போன்ற, இந்தியாவின் மிகப் பழமையான கண்டுபிடிப்புகளை முன்னிலைப் படுத்தியது. இந்தியாவைச் சார்ந்த எழுச்சியூட்டும் அறிவியல் வல்லுநர்கள் மற்றும் சிந்தனையாளர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளும், இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின்(ISRO) "Polar Satellite Launch Vehicle (PSLV)" போன்ற பல கண்டுபிடிப்புகளும் இக்கண்காட்சியில் இடம்பெற்றன.

### Ancient Weights



A selection of 14 polished stone (Chert) weights from excavations at Mohenjodaro, Northern India, c.B.C.3000. (Representative collection)

பண்டைய கால எகிப்து மற்றும் மெசபடோமியா (Mesopotamia) போன்ற நாகரிகங்களின் சமகாலத்தில் இருந்த, சிந்து சமவெளி நாகரிகத்தில், உணவு முதல் விலை உயர்ந்த ரத்தினங்கள் வரை எடையிட இந்த எடைக்கற்கள் பயன்படுத்தப்பட்டன.

## The Bakhshali Manuscript




The 70 page Bakhshali manuscript, 224-383 CE. (© Bodleian Libraries, University of Oxford)

1881 ஆம் ஆண்டு, இன்றைய பாகிஸ்தானின் பெஷாவர் அருகில் உள்ள "Bakhshali" என்ற கிராமத்தில் இந்த கைப்பிரதி கண்டெடுக்கப்பட்டது. 70 பூச்சமரப்பட்டைகளால் (Birch bark) ஆன இக்கைபிரதியில், ‘0’ பூஜ்யங்களானது ‘.’ புள்ளிகளாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கைபிரதி நினைத்ததை விட மிகவும் பழமையானது என்பது செப்டம்பர் 2017 இல் அறியப்பட்டது. இதன் மூலம் இந்தியர்கள், மூன்றாம் நூற்றாண்டிலேயே, பூஜ்யத்தை ஒதுக்கிட எண்ணாக (Placeholder Number) பயன்படுத்திய முன்னோடிகள் என்று அறிய வந்தது.

1902 ஆம் ஆண்டிலிருந்து, Oxford பல்கலைக்கழகத்தின் "Bodleian" நூலகத்தில் இக்கைபிரதி பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

## The Mars Colour Camera



Model of Mars colour camera, 2013. (® Indian Space Research Organisation, courtesy of Science Museum Group)

2014ஆம் ஆண்டில், செவ்வாய் கிரகத்தை முதல் முயற்சியிலேயே அடைந்த மங்கள்யான் விண்கலத்தின் வெற்றியை இந்தியாவே கொண்டாடியது. இதற்கு முக்கியமாக பயன்படுத்தப்பட்ட கருவி "Mars Colour Camera". செவ்வாய் கிரகத்தை விரிவாகப் படம் பிடித்து, இந்தியாவின் முதல் "Mars Atlas" வெளியிட இக்கருவி பயன்படுத்தப்பட்டது.

## The Bhugola

Bhugola or Earth-Ball by Ksema Karna, India, 1571.
(© Museum of the History of Science, University of Oxford)



பதினாறாம் நூற்றாண்டை சார்ந்த, பித்தளையினால் செய்யப்பட்ட இந்த உலக உருண்டையின் வெளிப்புறத்தில், உலக வரைபடம் காணப்படுகின்றது. இவ்வரைபடம், பாரம்பரிய இந்து மத சிந்தனையான 'உலகம் முட்டை வடிவானது' என்பதையும், கிரீஸ் நாட்டிலிருந்து இஸ்லாமிய நாகரீகம் மூலமாக இந்தியாவில் பரவிய 'உலகம் கோள வடிவானது' என்ற இரண்டு மாறுபட்ட சிந்தனைகளையும் இணைக்கின்றது.

## The Oscillating Plate Phytograph



Jagdish Chandra Bose's oscillating plate phytograph, early 1900s (® JC Bose Science Heritage Museum, courtesy of Science Museum Group).

1858 ஆம் ஆண்டில், இன்றைய வங்காள தேசத்தில் பிறந்து, இந்தியாவின் மிகச் சிறந்த விஞ்ஞானிகளில் ஒருவராக திகழ்ந்த ஜெகதீஷ் சந்திர போஸ் கண்டுபிடித்ததுதான் "Oscillating Plate Phytograph". புவிஈர்ப்பு சக்தி, வெளிச்சம் மற்றும் வெப்பத்தினால் செடிகளில் ஏற்படும் அசைவுகளையும் சுற்றுசூழல் மாற்றங்களினால் ஏற்படும் விளைவுகளையும் கண்டறிய இக்கருவி பயன்படுத்தப்பட்டது.

**ISRO'S Polar satelite launch vehicle:**




Model of Polar Satellite Launch Vehicle. (® Indian Space Research Organisation, courtesy of Science Museum Group)

1990 ஆம் ஆண்டின் ஆரம்ப காலத்தில் இந்திய விண்வெளி ஆய்வு மையத்தினால் (ISRO) உருவாக்கப்பட்டு, இந்தியாவின் மிகச்சிறந்த விண்வெளிக்கலன் என்ற புகழ்பெற்ற "Polar Satellite Launch vehicle" (PSLV), நாட்டின் வேகமாக வளர்ந்து வரும் விண்வெளி ஆராய்ச்சிக்கு சிறந்த சான்றாக விளங்குகின்றது.

1993 ஆம் ஆண்டு, முதல் முயற்சியில் தோல்வி அடைந்தாலும், அதன் பின்னர் கனடா, அமெரிக்கா (US), UK போன்ற பல நாடுகளுக்கு சிறந்த செயற்கைகோள் ஏவுகணையாக PSLV விளங்குகின்றது.

| சத்சங்க நிகழ்ச்சிகள் | |
|---|---|
| 8-12 நவம்பர் 2017 | பெரியகுளம் நாமத்வார் திறப்பு விழா |
| 14 நவம்பர் 2017 | ஏகாதசி |
| 23 நவம்பர் 2017 | திருநாங்கூர் ஸ்ரீ செம்பொன்செய் கோவில் ஸம்ப்ரோக்ஷணம் |
| 30 நவம்பர் 2017 | ஏகாதசி |
| 01 டிசம்பர் 2017 | அபயம் - பஜனாஸ்ரமம், கூடுவாஞ்சேரி |

## அறிவிப்பு

**அனைத்து வாசகர்களும், தங்களது தொலைபேசி எண்ணை, தங்களது சந்தா எண்ணுடன் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

Email:
helpdesk@madhuramurali.org
Ph: "24895875"

## ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்கு தெரிவிக்க வேண்டிய விஷயங்களை அனுப்பவேண்டிய முகவரி

Dr.A.BHAGYANATHAN,
Personal Secretary to
HIS HOLINESS
SRI SRI MURALIDHARA SWAMIJI
Plot No 11, Door No 4/11,
Netaji Nagar Main Road,
Jafferkhanpet, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email :
contact@namadwaar.org

மதுரமுரளி

- Publisher : S. Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission
- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
- Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
- Advertisements in Madhuramurali are invited.

**யஜுர் வேத கனம் தேர்வு பெற்ற வித்யார்த்திகள், சாந்திபனி குருகுலம், மதுரபுரி**



**ஸ்ரீ ஸ்வாமிஜியின் திருநக்ஷத்திர தினத்தன்று, திருவண்ணாமலை யோகி ராம்சுரத்குமார் ஆஸ்ரமம் Justice ஸ்ரீ TS அருணாச்சலம் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்கு புஷ்பவர்ஷம் செய்தார்**



Registered with The Registrar of Newspapers for India
R.No 62828/95
Regd. No. TN/CC(S)DN/119/15-17

Date of Publication: 1st of every month
Date of Posting: 5th and 6th of every month
Licensed to post without prepayment
WPP No. TN/PMG(CCR)WPP—608/15-17



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No2, Old No 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai – 83 and Printed by Mr R. Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A. Sivakasi Co-op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar